முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1306

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.04.2023, வியாழக்கிழமை

1. அறமாக வாழும் அண்ணலே
   ஆற்றல்பட உலகோர்க்கு தர்மபலம்
   வரமாக தருகின்ற ஞான குருவே
   வாழும் ஞானியே அரங்கனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 14ம் நாள், 27.04.2023, வியாழக்கிழமை)
   சிந்தைபட உன்னால் ஞானஉலகம் விரைந்து மாற்றம் காணுமப்பா
   சிந்தைபட உலகோரெல்லாம் சித்திகள்பெற்று உன்னால்
3. உன்னால் ஞானிகள் ஆவரப்பா உயர்வான ஞானவான்களே வாழுகின்ற
   உத்தமமாக சத்திய யுகமாக இந்த பேருலகம்
   உலகமெல்லாம் மாற்றங்கள் இனிதே
   உயர்வான காலமாக கலியுகம் தானும் சடுதி காணுமப்பா
4. அப்பனே அந்தவித ஆக்கத்தை ஆறுமுகன்யான் அரங்கன்உன்னுள் இருந்து நடத்தஇருக்க
   ஒப்புகொண்டு உன்னை உலகம் சரணடைந்தால் உயிர்பாதுகாப்பும் உலகமெல்லாம் இயற்கை பாதுகாப்பும் கூடி
   கூடியே உலகம் பேராற்றல் பெரும்
   குறைவின்றி ஞானலோகமாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–